*6*

# "அவருடைய வசனத்தைக் கவனித்தல்"

இயேசுவினுடைய சிறந்த நண்பரான லாசருவும் அவரது இரு சகோதரிகளான மார்த்தாள் மற்றும் மரியாள் என்பவர்களும், எருசலேமுக்கு வெளியே இருந்த பெத்தானி என்ற இடத்தில் வசித்தனர். இயேசு அவ்வழியாகக் கடந்து சென்றபோது, அவர்களின் இல்லம் அவரது இல்லமாக இருந்தது. அவர் அவ்வாறு சென்றிருந்த வேளைகள் ஒன்றில், இயேசுவையும் அவரது சீஷர்களையும் மார்த்தாள் தனது இல்லத்தினுள் வரவேற்றுக்கொண்டாள் (லூக்கா 10:38-42). அவள் அனேகமாக இயேசு கூறவிருந்ததைக் கேட்க விரும்பியிருக்கலாம், ஆனால் அவள் "பற்பல வேலைகளைச் செய்வதில் வருத்தமடைந்தாள்" (வசனம் 40அ).

வீட்டில் உள்ள ஆண்கள் ஒரு அறையில் கூடி சந்திக்கையில், அங்குள்ள பெண்களே தங்கள் விருந்தினர்களுக்கு உணவு தயாரித்தல் என்பது வழக்க மாகும். ஆண்கள் பேசிக்கொண்டிருக்கும் அறையில் அவர்களுக்கு உணவு பானம் முதலியவற்றை அளிப்பதற்காகவோ, அல்லது வேறு ஏதேனும் கடமையைச் செய்வதற்காகவோ தவிர, அந்த அறைக்குள் பெண்கள் பொதுவாகச் செல்வதில்லை. வழக்கம் என்பது வற்புறுத்தியவற்றை மார்த்தாள் செய்துகொண்டிருந்தாள். அவள் ஒரு சிறந்த உபசரிப்பாளியாக இருக்க முயற்சி செய்துகொண்டிருந்தாள், மற்றும் அவள் மரியாளும் அதையே செய்ய வேண்டும் என்று நினைத்தாள். மரியாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து, அவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்ததைக் கண்ட மரியாள் திகைப்படைந்திருக்க வேண்டும். அந்த அறையில் ஆண்களுடன் அவள் இருந்ததைக் கண்டு மாத்திரமல்ல, ஆனால் அவள் அவர்களுக்கு உணவு தயாரிப்பதில் உதவுதல் என்ற தனது கடமையைப் புறக்கணித்ததையும் கண்டு மரியாள் திகைப்படைந்திருக்க வேண்டும்.

மரியாளின் நடக்கையினால் தொந்தரவுபடுத்தப்பட்ட மார்த்தாள் இயேசுவினிடம், "ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்" (வசனம் 40ஆ). இயேசுவின் பதிலானது அவர் மார்த்தாள் தயாரிக்கும் உணவைப் பெற்றுக்கொள்வதைக் காட்டிலும் தமது வசனங்கள் என்ற ஆவிக்குரிய உணவைப் பரிமாறுவதில் அதிக அக்கறையுடன் இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றன. அவர், "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக்

கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்று பதில் அளித்தார் (வசனங்கள் 41ஆ, 42).

தேவனுடைய வசனமாகிய உணவில் பங்கேற்றல் என்பதே மரியாள் தேர்ந்துகொண்டிருந்த "நல்ல பங்காக" இருந்திருக்க வேண்டும். மார்த் தாளின் அக்கறை மோசமானதாக இருக்கவில்லை. அவள் தன்னிடம் சாதாரணமாக எதிர்பார்க்கப்பட்டதையே செய்துகொண்டிருந்தாள். இருப்பினும், மரியாளின் அக்கறை மேன்மையானதாக இருந்தது. இயேசு "அவரது வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்ததை விட்டு" (வசனம் 39ஆ) மரியாளை எடுத்துப்போட நினைக்க மாட்டார். இது இயேசு ஆவிக்குரிய உணவை உடலுக்குரிய உணவிற்கு மேலாக வைத்த ஒரே ஒரு வேளையாக இருந்ததில்லை. கிணற்றின் அருகில் ஒரு பெண்ணிடம் அவர் பேசிக் கொண்டிருந்த பின்பு, அவரது சீஷர்கள் அவர் உண்பதற்கு உணவை வாங்கி கொண்டு வந்தனர், அப்போது அவர், "நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு" என்று கூறினார் (யோவான் 4:32). பிற்பாடு, அவர் தம்மையும் தமது செய்தியையும் "வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்" என்று ஒப்பிட்டார் (யோவான் 6:33). அவரே வானத்திலிருந்து வந்த அப்பமாக இருந்தார் (யோவான் 6:41).

## இன்றைய நாட்களில் தேவன் பேசுகிறார்

இதுவரையிலும் நாம் படித்துள்ளதான ஆராதனையின் பெரும்பான் மையான வெளிப்பாடுகள், ஆராதிப்பவர் தேவனுடன் பேசுவதற்கான வழிமுறைகளாக உள்ளன. உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, நாம் ஜெபம், துதி, மற்றும் ஐக்கியவிருந்து ஆகியவற்றில் உணர்வுப்பூர்வமான மற்றும் அகப்பொருள் கொண்ட "திரும்பவரும் கருத்துக்களை" பெறத் தொடங்கு கிறோம்; ஆனால் வாசித்தல், போதித்தல், அல்லது பிரசங்கித்தல் மூலமாக வேதவசனங்கள் திறக்கப்படாத வரையிலும் தேவன் நம்முடன் உணரக் கூடிய எந்த வழியிலும் பேசுவதில்லை.

இன்றைய நாட்களில் சில இடங்களில், ஆராதனை வேளையில் பிரசங்கித்தல் அல்லது போதித்தலுக்கு செலவிடப்படும் நேரத்தைக் குறைப்பதற்கு வலியுறுத்தம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பிரசங்கித் தலுக்கு ஒதுக்கப்படும் நேரமானது, பாடுதல், ஜெபித்தல், மற்றும் கர்த்தருடைய இராப்போஜனம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்படும் நேரத்துடன் சமானப்படுத்த வேண்டும் என்ற சிந்தனையில் சிறப்பு இருக்கலாம். அதே வேளையில், ஆராதிப்பவருடன் தேவன் பேச அனுமதிப்பதன் முக்கியத்து வத்தைக் குறைத்துவிடாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இருவழி செய்தித்தொடர்பு நடைபெறாத வரையில் ஆராதனை முழுமை யடைவதில்லை.

மோசேயின் நாட்களில் இருந்தே, பிரசங்கித்தல் என்பது தேவன் தமது சித்தத்தை மனிதர்களுக்கு வெளிப்படுத்த அவர் தேர்ந்துகொண்ட முறைமையாக இருந்துள்ளது. மோசே தமது மரணத்திற்கு முன் நியாயப்

பிரமாணத்தைப் பிரசங்க நடைமுறையில் தெரிவித்ததை உபாகமம் பதிவு செய்துள்ளது. அவர் நியாயப்பிரமாணத்தை ஒத்திகை பார்த்தது மட்டுமின்றி, அதை விளக்கப்படுத்தி, அந்த காலகட்டத்திற்கு ஏற்றதாக இருந்த குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அதை நடைமுறைப்படுத்தவும் செய்தார். தேவன் தம் மக்கள் பிரசங்கித்தல்மூலம் தம்மிடம் திரும்பும்படிக்கு மீண்டும் மீண்டும் தமது தீர்க்கதரிசிகளை அவர்களிடம் அனுப்பினார். வரலாற்றில் மக்கள் நியாயப்பிரமாணத்தை வாசிப்பதைப் புறக்கணித்து தீர்க்கதரிசிகளின் குரல்களை அடக்கிய காலங்களில் எல்லாம், அவர்கள் விசுவாச விலக்கம் என்ற இருள் சூழ்ந்த இரவுகளில் விழுந்தனர். அந்த இருளான இரவுகளில் ஒன்று யூதாவுக்கு எழுபது ஆண்டுகள் காலம் நீடித்தது.

பாபிலோனிய சிறையிருப்பில் எழுபது ஆண்டுகள் கழிந்த பின்பு, தேவன் தமது மக்களைத் திரும்பவும் எருசலேமுக்குக் கொண்டு செல்வதற்கும், தேவாலயத்தைத் திரும்பக் கட்டியெழுப்புவதற்கும், அவர்களின் நாட்டிற்குரிய மற்றும் ஆவிக்குரிய வாழ்வை மறுகட்டுமானம் செய்வதற்கும், செருபாபேல், எஸ்றா மற்றும் நெகேமியா ஆகியோரை எழுப்பினார். பணியானது நின்றிருந்தபோது, தேவன் அவர்களை அவர்களின் பணிப்பொறுப்புக்குத் திரும்ப அழைப்பதற்காக ஆகாய் மற்றும் சகரியா என்ற தீர்க்கதரிசிகளை அனுப்பினார் (எஸ்றா 4:24-5:2). தேவனுடைய வசனத்திற்குத் திரும்புதல் என்ற விஷயமின்றி மறுசீரமைப்பு என்பது நடக்க இயலாததாக இருந்தது.

அந்த நாட்களில், ஒவ்வொரு இல்லத்திலும் எழுதப்பட்ட வசனம் இருந்ததில்லை. மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு, கைகளினால்தான் பிரதிகள் தயாரிக்கப்பட்டன. ஒருசில பிரதிகளே இருந்தன, அவைகளும் வேதபாரகர் மற்றும் மார்க்க நடத்துனர்கள் ஆகியோரின் கைகளில் இருந்தன. தேவனுடைய மக்கள் பாபிலோனில் இருக்கையில், அவர்கள் நீண்ட காலமாக வசனத்தைக் கேள்விப்படாமலேயே இருந்தனர். எருசலேமின் மதில்கள் கட்டி முடிக்கப்பட்டபோது, திரும்பியிருந்த மக்கள் நியாயப்பிரமணம் வாசிக்கப்படுவதற்காக ஒன்றுகூடும்படி அழைக்கப்பட்டனர். நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுகையில் மக்கள் அதைப் புரிந்துகொள்ளுவதற்காக அர்த்தம் சொல்லி விளங்கப் பண்ணுவதற்கு, எஸ்றாவுடன் பதிமூன்று மனிதர்கள் எழுந்து நின்றனர். எஸ்றா காலை முழுவதிலும், மத்தியானம் வரைக்கும் வாசித்தார், மக்கள் அதைக் கவனித்துக் கேட்டனர். வசனம் வாசிக்கப்படுவதை அவர்கள் கேட்டபோது, அவர்கள் அழுதனர். தேவனுடைய வசனம் அவர்களின் இருதயங்களில் குற்றத்தை உணர்த்தி அவர்கள் அவரது சித்தத்திற்கு இசைந்திருக்க வேண்டியது அவசியம் என்று அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்தது என்பது தெளிவு (நெகேமியா 8:1-9).

தேவனுடைய குமாரன் ஒரு பிரசங்கியாராக இருந்தார் என்ற உண்மையில் பிரசங்கித்தலின் முக்கியத்துவம் காணப்படுகிறது. அவரது அப்போஸ்தலர்கள் பிரசங்கியார்களாக இருந்தனர். கிறிஸ்தவத்திற்கு முதன் முதலில் மனம்மாறியவர்கள் பிரசங்கித்தலினாலேயே அவ்வாறாக்கப்பட்டனர் (நடபடிகள் 2). போய், சீஷராக்கி அவர் கட்டளையிட்ட

யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி, அவர்களுக்கு உபதேசம்பண்ண வேண்டும் என்பதே இயேசுவின் நிறைவான கட்டளையாக இருந்தது (மத்தேயு 28:18-20). அப்போஸ்தலரான பவுல், ''சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காகவே'' தாம் அனுப்பப்பட்டதாக உறுதிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 1:17அ), ஏனெனில் "பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங் கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று" (1 கொரிந்தியர் 1:21). போதித்தல் மற்றும் பிரசங்கித்தல் ஆகியவற்றினாலேயே சபைகள் நடப்பட்டன (மற்றும் இன்னமும் நடப்பட்டு வருகின்றன).

சபையில் தேவனால் நியமிக்கப்பட்ட பணிப்பொறுப்புகள் ஐந்தும் (அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், மற்றும் போதகர்கள்; எபேசியர் 4:11) பிரசங்கிக்கும் மற்றும் போதிக்கும் பணிப்பொறுப்புகளாகவே உள்ளன. தீமோத்தேயுவுக்குப் பவுல் "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு'' என்று கூறினார் (2 தீமோத்தேயு 4:2). பிரசங்கித்தல் அல்லது போதித்தலைக் குறைத்துப் போடுதல் என்பது, தேவனுடைய வசனம் கேட்கப்படுதலைக் குறைத்துப் போடுதலாக உள்ளது.

## நமது பாதைக்கு வெளிச்சம் கொடுத்தல்

புதிய ஏற்பாடு எழுத்து வடிவத்தில் முடிக்கப்படுவதற்கு முன்பு வசனத்தைப் பேசுதலுக்கு மாபெரும் தேவை இருந்தது என்று நாம் நினைக்கலாம். சபை இளையதாக இருந்தது, கற்றுக்கொள்ள அதிகமான விஷயங்கள் இருந்தன. தேவன் ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகத் தமது வசனத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந் தார். மக்கள் கவனிப்பதற்கு ஆவலுடன் இருந்தனர் ஆனால் தேவன் கூற இருந்தவற்றைக் கேள்விப்படுவதற்கு ஒருசில வாய்ப்புக்களையே கொண் டிருந்தனர்.

இன்றைய நாட்களில் வசனத்திற்கு இதைவிடக் குறைவான தேவை ஏதேனும் உள்ளதா? பேசப்படுகிற வசனத்தைக் குறைத்தல் என்பது நம்மை விசுவாச விலக்கத்தின் இன்னொரு இருளான இரவுக்குள் வழிநடத்தக் கூடுமா? பேசப்படுகிற வசனத்தை மட்டுப்படுத்துதல் நமது ஆராதனையை மேம்படுத்துமா அல்லது தேவனிடத்தில் நெருங்கிச் சேர்க்குமா? தாவீது, ''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' என்று அறிவித்தார் (சங்கீதம் 119:105). வாழ்வினூடே நடத்தல் என்பது கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் நிலத்தின்மேல் இரவு வேளையில் நடத்தல் போன்றதாக உள்ளது. பாதுகாப்பான பாதை நெடுகிலும் அடையாளக்குறிகள் வைக்கப் பட்டுள்ளன, ஆனால் அந்த நடையைப் பாதுகாப்பாக முடிப்பதற்கு ஒரு நல்ல வெளிச்சம் தேவைப்படுகிறது. நாம் ஒரு மங்கலான வெளிச்சத்தைக் கொண்டோ அல்லது வெளிச்சமே இல்லாமலோ அந்தக் கண்ணிவெடி நிலத்தின் வழியே நமது பாதையை ஏற்படுத்த முயற்சிக்க விரும்புகிறோமா?

*நான் அந்த அடையாளக் குறிகளைத் தெளிவாகக் காண்பதற்கும் எதிரியானவன் எனக்கு முன்பாக வைத்துள்ள அபாயமான வெடிகள் எதையேனும் கண்டுபிடிப்பதற்கும் ஒரு பிரகாசமான வெளிச்சத்தை விரும்புகிறேன்! தேவனுடைய வசனமே இந்த நடை முழுவதிலும் நம்மை வழிநடத்தக்கூடிய ஒரே வெளிச்சமாக உள்ளது. இந்த வெளிச்சமின்றி வாழ்வினூடே பாதுகாப்பாக நடந்து செல்ல முயற்சி செய்கிற எவரும் போதிய அளவு கருவிகளற்றவராக அபாய நிலையில் இருக்கிறார்.*

*ஆப்பிரிக்கா நாட்டின் சில பகுதிகளில், பஃப் அடர் என்ற நாகபாம்புகள் மிகவும் பயங்கரத்திற்கு உரியவைகளாக உள்ளன. இந்தப் பாம்பு பகல் வேளையில் மிகவும் அரிதாகவே காணப்படும், ஆனால் இரவு வேளைகளில்தான் இது வெளியே வர விரும்புகின்றன. மெதுவான, ஆனால் திடீரென்று தோற்றமளிக்கும் இந்த உயிரினம் தனது நீண்ட உடலை மாபெரும் முயற்சியுடன் இழுக்கிறது; எனவே இது மக்கள் நடந்து செல்கிற சமப்படுத்தப்பட்ட சாலையில் செல்ல விரும்புகிறது. பஃப் அடர் என்ற இந்த நாகபாம்பு, தான் தவறாக நடத்தப்பட்டால் ஒழிய மிக அரிதாகவே கடிப்பதாக அல்லது தாக்குவதாக உள்ளது, சில வேளைகளில் பாதையில் நடந்து செல்லும் யாரேனும் ஒருவர் இந்தப் பாம்பைக் காண இயலாமல், தற்செயலாக இதன்மேல் அடிவைத்து மிதித்து விடுவார். பஃப் அடர் என்ற இந்தப் பாம்பு கடிப்பதன் விளைவாக பாதிக்கப்பட்டவர் மரணம் அடைவது அரிது, ஆனால் அவர் தனது பாதத்தை அல்லது காலை இழந்துபோவார். கடியினால் புண்ணான கால்கள் மாபெரும் சிரமத்தின் பேரிலேயே குணமாகின்றன; சிலவேளைகளில் பாதிக்கப்பட்ட பாகத்தை உடலில் இருந்து நீக்கிப் போடுவதுதான் விஷத்தை நீக்கும் ஒரே வழியாக உள்ளது. இரவுவேளையில் பாதையில் நடப்பவர் ஒரு மின் கைவிளக்கு (அல்லது பளிச்சிடும் விளக்கு) கொண்டிராதிருந்தால், அல்லது முன் செல்லும் பாதையில் வெளிச்சம் காண்பிக்கப் போதிய அளவுக்கு நிலவு வெளிச்சமாயிராதிருந்தால் அபாயத்தில் இருக்கிறார். ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், ஆராதனையானது நமது கைவிளக்குகளைத் தூண்டி, நமது மின்கலங்களை மீண்டுமாக மின்சாரம் பெற்றுக்கொள்ளச் செய்து, நமது லாந்தர் விளக்குகளைச் சரிசெய்வதாக இருக்க வேண்டும். நமது ஆராதனை வேளையில் வசனத்திற்குள் செல்லுதலைப்போல வேறெதுவும் இதை நிறைவேற்ற முடியாது.*

## நமது உண்மையான இயல்பைப் பிரதிபலித்தல்

*யூதா தேசமானது மீளக்கட்டுவிக்கப்பட்டு, தேவனுடைய வசனத்தை வாசித்து அர்த்தம் கூறப்பட்டதைக் கேட்டபோது அவர்கள் அழுதனர் என்று நாம் ஏற்கனவே கண்டுள்ளோம் (நெகேமியா 8). வசனம் வெளிப்படுத்தப்படும்போது சிலர் ஏன் அழுகின்றனர் மற்றும் சிலர் ஏன் அழுவதில்லை என்பதை யாக்கோபு 1:21-25 விளக்குகிறது. வசனம் என்பது நாம் தேவனைக் கண்ணோக்குகிற பலகணி மாத்திரம் அல்ல, மற்றும் வாழ்வின் - பாதையில் நாம் பயணிக்கும்போது நமக்கு வழிகாட்டுகிற விளக்காக மாத்திரம் இருப்பதில்லை, ஆனால் அது நமது உண்மையான*

இயல்பைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகவும் இருக்கிறது. நாம் “உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் ... ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்கிற” போது, நாம் “திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும்” ஆகிறோம். இதற்கு மறுபுறத்தில், “திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாத [நபர்], ... கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்த்தும், பார்த்ததை மறந்து போகின்ற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறார்” (யாக்கோபு 1:21-24). வசனம் அவரது இயல்பைப் பிரதிபலித்தாலும், அவர் அதன்மீது கவனம் செலுத்துவதில்லை. அவர் உறுதிப்பாடு கொண்டிருப்பதில்லை, தவறுகளைத் திருத்தத் தீர்மானிப்பது இல்லை, தமது நிலைகுறித்து மனங்கசந்த கண்ணீர் இருப்பதில்லை. நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டதைத் தேவனுடைய மக்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் தங்களின் உண்மை நிலையைக் கண்டனர் மற்றும் அவர்கள் கண்டதை விரும்பாதிருந்தனர். அவர்கள் தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காமல் இருந்த உண்மையினால் கவலையடைந்தனர்.

நமது பாதை வழிக்கு ஒளியூட்டுகிற அதே வெளிச்சமானது நமது தவறுகளை வெளிப்படுத்துகிறதாகவும் உள்ளது. அது நம்மீதும் முன்னேயுள்ள பாதையின்மீதும் வெளிச்சம் வீசுகிறது. நாம் அந்த வெளிச்சத்தை எவ்வளவுக்கு நெருங்குகிறோமோ, அவ்வளவுக்கு நமது தவறுகள் அதிகமாக வெளிப்படுத்தப்படுகின்றன. நாம் நமது சொந்த தவறுகளை மறைப்பதற்கு அந்த வெளிச்சத்தைத் தவிர்க்கவோ, அல்லது அவற்றை அடையாளம் காணவும் திருத்துதலுக்காக அவற்றைக் கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கவும் அந்த வெளிச்சத்தை நெருங்கி அணுகவோ முடியும். வசனத்தைப் பிரசங்கித்தல் அல்லது போதித்தல் மூலமாக ஆராதனை என்பதை நம்மை வெளிச்சத்திற்கு வெளிப்படுத்துகிறது.

## நமது விசுவாசத்தில் முதிர்ச்சியடைதல்/பக்குவமடைதல்

ரோமர் 10:17, “ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்” என்று கூறுகிறது. உண்மையான விசவாசம் அவரது வசனத்தைப் பற்றிய அறிவின் மூலமாக மாத்திரமே வரக்கூடும். இயேசு தமது சீஷர்களுக்காகத் தம் பிதாவினிடத்தில் அவரது ஜெபத்தில், “உம்முடைய வசனமே சத்தியம்” என்று கூறினார் (யோவான் 17:17ஆ). எபிரெயக் கிறிஸ்தவர்கள் “நீதியின் வசனத்தில் பழக்கமற்றவர்களாயிருந்த”படியால் பக்குவம் இல்லாதவர்களாக இருந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டனர் (எபிரெயர் 5:13ஆ). அதன் எழுத்தாளர் அதற்கு முன்பு அவர்களுக்கு “ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்” என்று கூறியிருந்தார் (எபிரெயர் 2:1).

தேவனுடைய வசனத்துடன் தொடர்ந்து நாம் சம்பந்தப்படுத்தப்படவில்லையென்றால், நாம் கர்த்தருக்குள் வளர இயலாது. வசனமானது

ஆத்துமாவிற்கு உணவாக உள்ளது. தேவகுமாரனைப் பற்றிய அறிவு மாத்திரமே, "கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்" (எபேசியர் 4:11) விரும்பத்தக்க அளவிலான பக்குவத்தை நமக்குக் கொண்டுவரக் கூடும். பவுல் பின்வருமாறு கூறினார்,

> நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார் (எபேசியர் 4:14, 15).

வசனத்தை ஏற்றுக்கொள்ளுதலில் ஆராதனை என்பது கர்த்தருக்குள் பக்குவம் அடைவதற்கான மாபெரும் வழியாக உள்ளது.

## முடிவுரை

சில வேளைகளில் கிறிஸ்தவர்கள் மத்தியில் "குறைவான பிரசங்கித்தல் மற்றும் அதிக ஆராதனை" என்பதற்கான வேண்டுகோள் உள்ளது. பிரசங்கித்தல் அல்லது போதித்தல் என்பது ஆராதனையில் இருந்து வேறுபட்ட சில விஷயமாக உள்ளது என்பதே அந்த வேண்டுகோளின் மறைவான கருத்தாகும். வேதாகமரீதியான பிரசங்கித்தல் என்பது ஆராதனையின் சந்தர்ப்பப்பொருளில் நினைக்கப்பட வேண்டும். ஆராதிக்கும் சபைக்கூடுகையானது, வசனத்தை வாசித்தல் மற்றும் அறிவித்தல் என்பவற்றிற்கு மிகவும் பதில்செயல் உள்ள சூழ்நிலையை அளிக்க வேண்டும். அவரது வசனத்தைப் பிரசங்கித்தல் மற்றும் போதித்தல் என்பது மனம் வருந்தித் தேவனை ஆராதிப்பவர்களின் இருதயங்களில் மாபெரும் வகையில் ஏற்றுக்கொள்ளப்படுதலைக் கண்டறிய வேண்டும்.

இயேசு விதைப்பவன் உவமையைக் கூறியபின்பு, கேள்விகேட்ட தமது சீஷர்களிடத்தில் "விதை தேவனுடைய வசனம்" என்று விளக்கினார் (லூக்கா 8:11ஆ). இந்த உவமை "இருதயங்களைப் பற்றிய உவமை" என்று அழைக்கப்பட வேண்டும். இயேசு உண்மையில் விதையை விதைத்தல் பற்றியல்ல, ஆனால் விதையை [வசனத்தை] ஏற்றுக்கொள்ளக்கூடிய இருதயத்தின் வகையைப் பற்றிப் போதித்தார். விதையானது எல்லா இடங்களிலும் விதைக்கப்படுகிறது, எல்லா வகையான மண்ணிலும் விழுகிறது, இது எல்லா வகையான இருதயங்களையும் குறிக்கிறது. நல்ல நிலம், அல்லது இருதயம் என்பது, விதையை ஏற்றுக்கொண்டு அது வளரவும் உற்பத்தி செய்யவும் அனுமதிக்கிறது. இது தேவனை உண்மையுடன், நேர்மையுடன் ஆராதிக்கும் இருதயமாக இருக்க வேண்டும்.